# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விஷேசமானது

**අංක 244/4—1976 දෙසැම්බර් 20 වැනි සඳුද — 1976.12.20**

244/4 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### முத்திரைக் கட்டளைச் சட்டம்

*(247 ஆம் அத்தியாயமான) முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் நிதியமைச்சரினால் ஆக்கப்பட்ட விதி.*

*பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க,*
*நிதியமைச்சர்.*

*கொழும்பு,*
*17.12.1976.*

*விதி*

*(247 ஆம் அத்தியாயமான) முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 5 ஆம் திகதிய 14,707 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 1976 நவம்பர் 26 ஆம் திகதிய 240/12 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான விதியானது, அதற்கான அட்டவணையில் 145 ஆம் விடயத்துக்கு நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.*

146. *அலெக்சாந்தர் கிரகாம்பெல்லின் படத்தையும் அவரது கண்டுபிடிப்பான முதலாவது தொலைபேசியையும் சித்தரிக்கும் ரூபா 1.00 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரை.*

147. *பெண் தெய்வமாகிய தாராவின் சிலையைச் சித்தரிக்கும் ரூபா 5.00 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரை.*

148. *சுந்தரமூர்த்தி சுவாமியின் சிலையைச் சித்தரிக்கும் ரூபா 1.00 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரை.*

149. *மைத்ரேய போதிசத்வரின் சிலையைச் சித்தரிக்கும் 50 சதம் இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரை.*

150. *கண்டி மன்னர்களின் சிம்மாசனத்தைச் சித்தரிக்கும் ரூபா 2.00 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (விசேட) முத்திரை.*

151. *கண்டி இராச்சிய மன்னர்களால் அணியப்பட்ட கிரீடத்தைச் சித்தரிக்கும் ரூபா 1.00 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (விசேட) முத்திரை.*

*12-706/1*

---

### அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டம்

*(190 ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட விதி.*

*சி. குமாரசூரியர்,*
*அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சர்.*

*கொழும்பு,*
*20.12.1976.*

விதி

(190 ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப் பட்டு 1966 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 5 ஆம் திகதிய 14,707 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப் பட்டதும், 1976, நவம்பர் 26 ஆம் திகதிய 240/12 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிசேட வர்த்த மானியில் வெளியிடப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான விதியானது, அதற்கான அட் டவணையில் 146 ஆம் விடயத்துக்கு நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

147. அலெச்சாந்தர் கிராகாம்பெல்லின் படத்தையும் அவரது கண்டுபிடிப்பான முதலாவது தொலைபேசியையும் சித்தரிக்கும் ரூபா 1.00 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரை.

148. பெண் தெய்வமாகிய தாராவின் சிலையைச் சித்தரிக்கும் ரூபா 5.00 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரை.

149. சுந்தரமூர்த்தி சுவாமியின் சிலையைச் சித்தரிக்கும் ரூபா 1.00 இனப் பெறுமதியுடைய அஞ் சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரை.

150. மைத்ரேய போதிசத்வரின் சிலையைச் சித்தரிக்கும் 50 சதம் இனப் பெறுமதியுடைய அஞ் சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரை.

151. கண்டி மன்னர்களின் சிம்மாசனத்தைச் சித்தரிக்கும் ரூபா 2.00 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (விசேட) முத்திரை.

152. கண்டி இராச்சிய மன்னர்களால் அணியப்பட்ட கிரீடத்தைச் சித்தரிக்கும் ரூபா 1.00 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (விசேட) முத்திரை.

12-706/2

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### முதல் தொலைபேசித் தொடர்பு நூற்றுண்டை நினைவு கூருமுகமாக முத்திரை வெளியீடு

முதல் தொலைபேசித் தொடர்பு நூற்றுண்டை நினைவு கூருமுகமாக 1 ரூபா பெறுமதி கொண்ட அஞ்சல், இறைவரி முத்திரை வெளியீடு 1976, டிசம்பர் 21 ஆந் தேதியன்று வெளியிடப்படுமென இத்தால் பொதுத் தகவலாக அறிவிக்கப்படுகிறது.

இம் முத்திரை கையிருப்பு முடியும் வரை விற்பனையில் இருக்கும். நடைமுறையிலுள்ள நேரொத்த பெறு மதி கொண்ட அதாவது 1 ரூபா முத்திரைகள் புதிய முத்திரையுடன் ஒருங்கிணைந்து விற்பனையில் தொடர்ந் திருக்கும்.

1976, திசெம்பர் 21 ஆந் தேதியன்று வெளியிடப்படும் 1 ரூபா முத்திரை அலெக்சாண்டர் கிரகம்பெல் என்பவரது படத்தையும் அவரின் முதல் தொலைபேசிக் கண்டுபிடிப்பையும் குறிக்கும்.

எம். பீ. ஜே. சில்வா,
உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளர்
அதிபதி.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்.
கொழும்பு,
திசெம்பர் 15, 1976.

12-707

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது